29th July 1965]

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : வீடூர் நீர்த்தேக்கத்தை வெற்றிகரமாக நடத்தவேண்டுமென்றால் சாத்தனூர் நீர்த்தேக்கத் தண்ணீரைக் கொண்டுவந்து சேர்த்தால்தான் முடியும் என்று பெரிய, பெரிய என்ஜினியர்கள் எல்லாம் சொல்லியிருக்கிறார்களே, அது அரசாங்கத்திற்குத் தெரியுமா? அப்படியானால், மறு பரிசிலனை செய்வதின்மூலம் சாத்தனூரிலிருந்து தண்ணீர் கொண்டுவருவதற்கு உத்தேசம் உண்டா?

கனம் திரு. வெ. ராமைய்யா : அவ்வாறு உத்தேசமில்லை. இப்பொழுதுள்ள நிலைமைப்படி, சாத்தனூரில் முதல் கட்ட வேலை முடிந்து, இரண்டாவது கட்ட வேலை பூர்த்தியானால்கூட. தண்ணீர் கொடுக்கக்கூடிய நிலைமை ஏற்படாது.

திரு. சா. கணேசன் : சாத்தானூரிலிருந்து வீடூருக்குத் தண்ணீரை அளிப்பதனால், சாத்தனூரில் தண்ணீர்க்குறைவு ஏற்பட்டு, அது வீடூர் அணைக்கும் பயன்படாது என்பதை அரசாங்கம் உணர்ந்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமைய்யா : ஒரு அணையிலிருந்து இன்னொரு அணைக்குத் தண்ணீர் கொடுப்பதில் பாதகம் ஏற்படாது. ஆனால் இதில் அதற்கு சாத்தியமில்லை.

திரு. கரு. சீமைச்சாமி : வீடூர் நீர்த்தேக்கத்திலிருந்து திறந்து விடப்படுகிற தண்ணீர் எத்தனை ஏக்கர் ஆயக்கட்டு நிலத்திற்குப் பயன்படும்? அதன் நீர்ப்பிடிப்பு பரப்பின் விஸ்தீரணம் என்ன?

கனம் திரு. வெ. ராமைய்யா : இதற்குத் தனிக்கேள்வி வேண்டும்.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : சாத்தியமில்லை என்கிற வார்த்தையை எதை வைத்து அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள் என்பது புரியவில்லை.

கனம் திரு. வெ. ராமைய்யா : தண்ணீர் வசதியைப் பொறுத்து.

சாத்தனூர் நீர்த்தேக்கம்

*** 29 கேள்வி.—திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சாத்தனூர் நீர்த்தேக்கத்தின் இரண்டாம் நிலை வேலைகள் முடிந்தால் தென் ஆற்காடு மாவட்டத்தில் செஞ்சி, திண்டிவனம், வட்டங்களுக்கு சுமார் எத்தனை ஏக்கருக்கு நீர்ப்பாசனம் கொடுக்கக் கணக்கிட்டிருக்கிறார்கள்?

(இ) எப்போது கால்வாய் வெட்டும் வேலை ஆரம்பிக்கப்படும்?

கனம் திரு. வெ. ராமைய்யா : (அ) & (இ) சாத்தனூர் திட்டத்தின் இரண்டாம் நிலை வேலைகளின்போது நீர்த் தேக்கத்தின் கொள்ளளவை அதிக அளவிற்கு உயர்த்த வேண்டுமெனத் திட்ட

மிட்டுச் செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் கூடுதலாய்க் கிடைக்கும் தண்ணீரை திருக்கோயிலூர் அணைக்கட்டுத் திட்டத்தின்கீழ் 5,000 ஏக்கரில் இரண்டாம் போகப் பயிர் விளைச்சலை உறுதிப்படுத்த உபயோகித்துக்கொள்ளப்படும். எனவே, புதிதாய்ப் பாசன வசதியளிக்க உபரித் தண்ணீர் வசதியில்லை. செஞ்சி, திண்டிவனம் தாலூகாக்கள் சாத்தனூர் நீர்த்தேக்கத்திலிருந்தும், கால்வாய்களிலிருந்தும் வெகு தொலைவில் இருப்பதால் அவை இத்திட்டத்தின் மூலம் பயன்பெற முடியாது.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, திருக்கோயிலூர் சாத்தனூருக்கு அருகாமையில் இருப்பதாகவும், செஞ்சி சாத்தனூருக்கு வெகு தூரத்தில் இருப்பதாகவும் சொல்கிற அமைச்சர் அவர்கள் நேரில் பார்த்துவிட்டு வந்து சொல்கிறார்களா அல்லது படத்தைப் பார்த்துச் சொல்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமையா : நேரில் பார்ப்பதைவிட அதில் உள்ள நிலைமைகளைப் புரிந்து கொள்ளலாம். அந்த வகையில்தான் அரசாங்கம் இதை முடிவு செய்திருக்கிறது. நான் பார்த்து முடிவு செய்யவில்லை.

திரு. எஸ். முருகையன் : சாத்தனூர் தண்ணீர் 20 ஆயிரம் ஏக்கர் நிலத்திற்குப் பாசனத்திற்கு விடப்படுகிறது. இரண்டாவது கட்ட நிலை முடிந்துவிட்ட பிறகு அதனுடைய கொள்ளளவு இப்போது இருப்பதைப்போல் இரண்டு மடங்கு அதிகமாகும் என்று சொல்லப்படுகிறது. அப்படியானால் 20 ஆயிரம் ஏக்காராக இருப்பது 40 ஆயிரம் ஏக்காராக அதிகமாக உயரும். ஆனால் அமைச்சர் அவர்கள் சொல்லும்பொழுது 5 ஆயிரம் ஏக்கருக்குத் தான் தண்ணீர் விடலாம் என்று சொன்னார்கள். அப்படியானால் மீதித் தண்ணீரை என்ன செய்யப்போவதாக உத்தேசம்?

கனம் திரு. வெ. ராமையா : சாத்தனூர் முதல் கட்ட வேலை முடிந்து, இரண்டாவது கட்ட வேலையும் பூர்த்தியானால்தான் எதிர்பார்த்த அளவுக்குத் தண்ணீர் கொடுக்க முடியும். ஆகவே, இரண்டாவது கட்டம் பூர்த்தியாகும்பொழுது, அதிலிருந்து அதிகமாகக் கிடைக்கும் தண்ணீரை திருக்கோயிலூர் அணைக்கு இரண்டாவது போகச் சாகுபடிக்காகக் கொடுக்கமுடியும். ஆகவே, இன்னும் அதிகமாகத் தண்ணீர் கொடுக்கக்கூடிய சூழ்நிலை இல்லை.

திரு. எஸ். முருகையன் : திருக்கோயிலூர் உட்பட, திருவண்ணாமலை, செங்கம் தாலூகாக்களுக்கு 20 ஆயிரம் ஏக்கருக்குப் பாய்ந்து கொண்டிருக்கிறது. இரண்டாவது கட்டம் பூர்த்தியடைந்த பிறகு அதன் கொள்ளளவு இரண்டு மடங்கு ஆகும் என்று சொல்கிறார்கள். அப்படியிருக்கும்பொழுது, இப்பொழுது 5 ஆயிரம் ஏக்கருக்குத்தான் தண்ணீர் விடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்று சொல்கிறார்கள். அதற்கு விளக்கம் பெற விரும்புகிறேன்.

29th July 1965]

கனம் திரு. வெ. ராமைய்யா : முதல் கேள்விக்குப் பதில் சொல்லக்கூடிய முறையில் சொன்னேன். சாத்தனூர் அணைக் கட்டில் இரண்டாவது கட்டம் பூர்த்தியானல் கிடைக்கும் தண்ணீரை, முதல் கட்டத்தில் எவ்வளவு எதிர்பார்த்தோமோ அதற்குப் பயன்படுத்திக்கொள்ள வேண்டியிருக்கிறது. அதில் உபரியாகத் தண்ணீர் இருந்ததினல் அந்தத் தண்ணீரைத் திருக் கோயிலூர் அணைக்கட்டின்மூலம் இரண்டாவது போகத்திற்குப் பயன்படுத்திக்கொள்ளக்கூடிய முறையிலேதான் 5 ஆயிரம் ஏக்க ருக்குத் தண்ணீர் கொடுக்கப்படும் என்று சொன்னேன்.

திரு. க. ர. நல்லசிவம் : சாத்தனூர் பகுதியிலுள்ள விவசாயி களுக்கு அந்தத் தண்ணீரை நஞ்சைக்குப் பதிலாகப் புஞ்சைக்குப் பயன்படுத்திக்கொள்ள ஏன் வசதி செய்து கொடுக்கக்கூடாது என்று கேட்க விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமைய்யா : இது ஏற்கனவே முடிவு செய்யப்பட்ட விஷயம். அங்கத்தினருக்கு ஞாபகம் இருக்கு மென்று நினைக்கிறேன். லோயர் பவானித் திட்டம் புஞ்சைக்காக உருவாக்கப்பட்ட திட்டம். ஏதோ ஒரு காரணத்தால் கொஞ்ச காலம் நஞ்சைக்காகப் பயன்படுத்தப்பட்டது. அதைப் புஞ்சைச் சாகுபடிக்குக் கொண்டுவர முயற்சி செய்யப்பட்டது. நஞ்சைக்கு இருப்பதைப் புஞ்சைக்குக் கொண்டுவருவது ரொம்பக் கஷ்டம்.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : சாத்தனூர் ஆற்றுக்கும் வேட்டங்குளம், பாக்கம் முதலிய பகுதிகளுக்கும் 4 மைல் தூரம் கூட இல்லை. இருந்தாலும் எந்தக் கணக்கை வைத்துக்கொண்டு முடியாது என்று சொல்லுகிறார்கள் ?

கனம் திரு. வெ. ராமைய்யா : நிபுணர்கள் அறிவித்துள்ள முடிவு இது. இதில் அங்கத்தினருக்கு ஏதாவது சந்தேகமிருந் தால் அல்லது அவரிடம் இது முடியும் என்ற அளவுக்குப் புள்ளி விவரங்கள் இருந்தால் அவற்றை என்னிடம் அனுப்பினல் நான் அதைப் பரிசீலனை செய்கிறேன்.

புலவர் கா. கோவிந்தன் : சாத்தனூர் அணைக்கட்டுத் தண்ணீர் ஆயக்கட்டு நிலங்களுக்குக் கொடுக்க முதல் கட்ட அளவு போது மானதாக இல்லை; இரண்டாவது கட்டத் தண்ணீரும் கொடுக்கப் படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். முதல் கட்டத்திலே எதிர்பார்த்த அளவு தண்ணீர் கிடைக்கவில்லை. ஆகவே, கிடைத்த தண்ணீரை மொத்த நிலங்கட்கும் பயன்படுத்து வது சாத்தியமில்லையா? அல்லது போட்ட கணக்குத் தப்பா என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமைய்யா : இதில் தப்பு ஒன்றுமில்லை. முதல் கட்டத்தில் கிடைக்கும் தண்ணீரைத் தவிர, இரண்டாவது கட்டமும் பூர்த்தியடைந்தால்தான் அந்தத் திட்டமே முடிவடை யும். அந்த முறையில்தான் அளவுகளை நிர்ணயித்திருக்கிறார்கள்.